# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : **மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்.120/ந/2026, நாள் 14.08.2026**

பி. இருதய லெனின் ராஜ்,
சிவகங்கை. – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
சிவகங்கை நகராட்சி, சிவகங்கை. – எதிர்மனுதாரர்

சிவகங்கை மாவட்டம், சிவகங்கை, காமாட்சி அம்மன் கோவில் தெரு, எண்.9/5 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. பி. இருதய லெனின் ராஜ், என்பவரது 14.04.2026 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 17.04.2026 அன்று பெறப்பட்டு 120/ந/2026 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சிவகங்கை மாவட்டம், சிவகங்கை, காமாட்சி அம்மன் கோவில் தெரு, எண்.9/5, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. பி. இருதய லெனின் ராஜ், என்பவரின் 14.04.2026 நாளிட்ட புகார் மனுவில் சிவகங்கை டவுன் சர்வே எண். 172, சுந்தரலிங்கம் பிள்ளை தெரு, ஆக்கிரமிப்பு அகற்ற கோரியுள்ளார்.

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 30.04.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் சிவகங்கை ஆணையரை கேட்டுக்கொள்ளப்பட்டது.

3) சிவகங்கை நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க. எண். 1398/2026/எப்1, நாள் 22.05.2026ல் மனுதாரரின் குற்றச்சாட்டுக்கு முறையே கீழ்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

"மேற்கண்ட ஆக்கிரமிப்பு தொடர்பாக மனுதாரர் முன்பே மாவட்ட ஆட்சியர் குறைதீர் நாளில் மனு அளித்துள்ளார் என்ற விபரமும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மனுதாரர் திரு. பி. இருதய லெனின் ராஜ் அவர்கள் அளித்த மனுவின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட இடமானது நகராட்சி அலுவலர்கள் மற்றும் நகர்சார் ஆய்வர் மூலம் நேராய்வு செய்யப்பட்டு நகர்சார் ஆய்வரிடம் குறிப்பு பெறப்பட்டுள்ளது. அக்குறிப்பின்படி மனுதாரர் குறிப்பிட்ட இடத்தில் 33.3 ச.மீ. அளவிற்கு சாலையின் இணைப்பு பகுதியில் சுற்று சுவர் எழுப்பி ஆக்கிரமிப்பு செய்துள்ளது தெரியவந்துள்ளது. அதன் பொருட்டு ஆக்கிரமிப்பு செய்த நபருக்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 பிரிவு 118 (6)ன் படி ஆக்கிரமிப்பினை அகற்ற கோரி

அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. அதன்பேரில் சம்பந்தப்பட்ட நபரால் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டு, தற்போது இடம் ஆக்கிரமிப்பின்றி உள்ளது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.".

4) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான சிவகங்கை நகராட்சி ஆணையர் ஆகியோரை 18.06.2026 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 05.06.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் 18.06.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகவில்லை.

6) சிவகங்கை நகராட்சி ஆணையர், தனது கடிதம் ந.க.எண். 1398/2026/எப்1, நாள் 17.06.2026ல் தனக்கு உடல்நலம் சரியில்லாததால், விசாரணைக்கு ஆஜராக இயலாத நிலை உள்ளதாகவும், 18.06.2026 அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு நகரமைப்பு ஆய்வர் திரு. எஸ். ராஜ்கமல் என்பவர் ஆஜராகி உரிய ஆவணங்களை சமர்ப்பிப்பார் என தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, 18.06.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் நகரமைப்பு ஆய்வர் திரு. எஸ். ராஜ்கமல் என்பவர் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"மனுதாரரின் புகாரில் குறிப்பிட்டுள்ள இடம், நகராட்சி அலுவலர்கள் மற்றும் நகர்சார் ஆய்வரால் நேராய்வு செய்யப்பட்டு, குறிப்பு கேட்கப்பட்டு, குறிப்பிட்ட இடத்தில் 33.3 ச.மீ. அளவிற்கு இரு சாலையின் இணைப்பு பகுதியில் (adjoining compound wall) சுவர் எழுப்பி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது தெரிய வந்தது. ஆக்கிரமித்த நபருக்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 பிரிவு 118 (6)ன்படி ஆக்கிரமிப்பினை அகற்ற கோரி அறிவிப்பு வழங்கப்பட்டு, ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டு, மனுதாரரின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்கள் முன்னிலையில் பணிந்து சமர்ப்பித்துக்கொள்கிறேன்.".

7) மனுதாரர் 18.06.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகாததால், மனுதாரருக்கு மேலும் ஒரு வாய்ப்பளிக்கும் பொருட்டு மனுதாரரை 28.07.2026 அன்று நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவத்தின் 07.07.2026 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது. மேற்படி அழைப்பாணையில் நகல் சிவகங்கை நகராட்சி ஆணையருக்கு நகலிடப்பட்டது.

8) மனுதாரர் 28.07.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"சிவகங்கை, டவுன் சர்வே எண்.172, சுந்தரலிங்கம் பிள்ளை தெருவில் இருக்கும் ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டும் என்ற எனது கோரிக்கைகேற்ப நகராட்சி அலுவலர்கள் மற்றும் நகர்சார் ஆய்வரால் இடம் நேராய்வு செய்யப்பட்டு புகாருக்குள்ளான இடத்தில் 33.3 ச.மீ. அளவிற்கு இரு சாலையின் இணைப்பு பகுதியில் (adjoining compound wall) சுவர் எழுப்பி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்ததை இடித்து அகற்றப்பட்டுள்ளது. எனினும் மேற்படி இடித்து அகற்றப்பட்ட கட்டிட இடிமான பொருட்கள் சாலையில் அப்படியே போடப்பட்டுள்ளது. மேற்படி கட்டிட இடிமான பொருட்களை அகற்றி, சாலையை சீரமைப்பு செய்து பொதுமக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவர நகராட்சியினை அறிவுறுத்துமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.".

9) எதிர்மனுதாரரான சிவகங்கை நகராட்சி ஆணையரின் சார்பில் நகராட்சி நகரமைப்பு ஆய்வர் 18.06.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளதாலும், மனுதாரரை 28.07.2026 அன்று ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவத்தின் 07.07.2026 நாளிட்ட அழைப்பானை மனுதாரருக்கு அனுப்பப்பட்டு, எதிர்மனுதாரரான சிவகங்கை நகராட்சி ஆணையருக்கு நகலிடப்பட்டுள்ளதாலும், எதிர்மனுதாரர் 28.07.2026 தேதிய விசாரணைக்கு ஆஜராகவில்லை.

10) மனுதாரரின் புகார்மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரரான நகராட்சி ஆணையரின் அறிக்கை, ஆணையர் சார்பில் ஆஜரான நகராட்சி நகரமைப்பு ஆய்வரின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டதில் கீழ்க்காணும் விவரங்கள் கண்டறியப்பட்டன:–

சிவகங்கை டவுன் சர்வே எண். 172, சுந்தரலிங்கம் பிள்ளை தெரு, ஆக்கிரமிப்பு அகற்ற கோரியுள்ளார் என்பதும், மேற்படி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள இடம் நகராட்சி அலுவலர்கள் மற்றும் நகர்சார் ஆய்வரால் நேராய்வு செய்யப்பட்டுள்ளது என்பதும், புகாருக்குள்ளான இடத்தில் 33.3 ச.மீ. அளவிற்கு இரு சாலையின் இணைப்பு பகுதியில் (adjoining compound wall) சுவர் எழுப்பி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதை இடித்து அகற்றப்பட்டுள்ளது என்பதும், இடித்து அகற்றப்பட்ட கட்டிட இடிமான பொருட்கள் சாலையில் அப்படியே போடப்பட்டுள்ளது என்பதும், மேற்படி கட்டிட இடிமான பொருட்களை அகற்றி, சாலையை சீரமைப்பு செய்து பொதுமக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவர நகராட்சியினை அறிவுறுத்துமாறு இம்முறைமன்ற நடுவத்தை மனுதாரர் கேட்டுக்கொண்டிருப்பது மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலத்திலிருந்து அறியவருகிறது.

மனுதாரர் ஆக்கிரமிப்பு தொடர்பாக மாவட்ட ஆட்சியர் குறைதீர் நாளில் மனு அளித்துள்ளார் என்பதும், மனுதாரரின் புகாரில் குறிப்பிட்டுள்ள இடம், நகராட்சி அலுவலர்கள் மற்றும் நகர்சார் ஆய்வரால் நேராய்வு செய்யப்பட்டதில், மேற்படி இடத்தில் 33.3 ச.மீ. அளவிற்கு இரு சாலையின் இணைப்பு பகுதியில் (adjoining compound wall) சுவர் எழுப்பி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது என்பதும் ஆக்கிரப்பு செய்த நபருக்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 பிரிவு 118 (6)ன்படி ஆக்கிரமிப்பை அகற்ற கோரி அறிவிப்பு வழங்கப்பட்டு, ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டு, மனுதாரரின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதும் சிவகங்கை நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகராட்சி நகரமைப்பு ஆய்வரின் வாக்குமூலத்திலிருந்து அறியவருகிறது.

இந்நேர்வில், மனுதாரர் தெரிவித்துள்ள புகாருக்குள்ள இடத்தில் இரு சாலையின் இணைப்பு பகுதியில் (adjoining compound wall) 33.3 ச.மீ. அளவிற்கு ஆக்கிரமிப்பு செய்து எழுப்பப்பட்ட சுவர் இடித்து அகற்றப்பட்டு மனுதாரருக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ள நிலையில், மேற்படி இடத்தில் இடித்து அகற்றப்பட்ட கட்டிட இடிமான பொருட்கள் சாலையில் அப்படியே போடப்பட்டுள்ளதற்கான புகைப்படங்களை ஆதாரத்துடன் மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார். எனவே, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் 2014இ பிரிவு 12 (1) (d)–ன் கீழ் அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் பொதுமக்கள் நலன் கருதி மேற்படி கட்டிட இடிமான பொருட்களை அகற்றி, சாலையை சீரமைப்பு செய்து பொதுமக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவர தேவையான துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சிவகங்கை நகராட்சி ஆணையரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 14–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. பி. இருதய லெனின் ராஜ்,
எண். 9/5, காமாட்சி அம்மன் கோவில் தெரு,
சிவகங்கை.

2. நகராட்சி ஆணையர்,
சிவகங்கை நகராட்சி,
சிவகங்கை மாவட்டம்.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண். 75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி. நகர், சென்னை 600 028.

4. இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண். 75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி. நகர், சென்னை 600 028.

நகல்– மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்,
இ.கோ./உதிரி.

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.